# பொத்துவில் பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மே் 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஆகஸ்ட் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பொத்துவில பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொத்துவில பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 15ம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 172(2) க்கு அமைய கணக்காய்வு கட்டணத்திற்கான நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுமதி சேர்வரியான ரூபா 1,836,250 மீளளிக்கப்படுவதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் வைப்புப் புத்தகத்தில் நீண்ட காலமாகக் காணப்படுகின்றது.

(இ) 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் UNDP நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உழவு இயந்திரம் பெறுமதி மதிக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்படவில்லை.

(ஈ) திரண்ட நிதியானது நிலையான சொத்துக்களைப் பிரதிபலிக்காமல் தொழிற்படும் மூலதனத்தை மட்டும் பிரதிபலிக்குமாறு கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(உ) சென்ற ஆண்டு காலப்பகுதியில் பெறப்பட்ட 14 வாகனங்களும் இயந்திரங்களும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின்போது சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 2,155,786 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,193,890 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் நிலுவையாகயுள்ள பொதுச்சந்தை, இறைச்சிக் கடை அரசிறை வருமானங்கள் 530,210 ஆகும். இதனை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 253,000 ஆகும். நீண்ட காலமாக இவை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நில வாடகை ஆகிய ரூபா 217,141 நிலுவையை அறவிட சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) ஊழியருக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 489,550 அறவிடப்படுவதற்கு நீண்ட காலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மறுக்கப்பட்ட 3 காசோலைகளின் பெறுமதியான ரூபா 8,647 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

## 2.3 வருவாய் நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் நிலுவை வருவாய்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவை வருவாய் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா000’ |
| (i) | தீர்வையும் வரியும் | 10 | 6 | - |
| (ii) | வாடகை | 2,820 | 4,949 | 2,813 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 765 | 624 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 2,537 | 469 | - |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா.5,531,184 ஆகும். முத்திரைத் தீர்வை ரூபா.561,450 ஆகும்.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்

2011 டிசம்பர் 31இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிகப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பதவிகளின் வகை | அங்கீகரித்தது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவிநிலைத் தரம் | 01 | ---- |
| உதவு தரங்கள் | 07 | 09 |
| ஆரம்பதரத்தினர் | 16 | 15 |
| ஏனைய தரங்கள் | --- | 15 |
| | 24 | 39 |

## 2.5 ஊழியர் கடன்

2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச்சென்ற கடமையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட, விலகிச் சென்ற 27 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா.844,570 கடன் நிலுவையை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருவாய் நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்